**வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை**
**வவுனியா மாவட்டம்**

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதியன்று தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களினாலான தாக்கத்தினைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுளுக்கேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான 07 காணிகளினதும் கட்டிடங்களதும் பெறுமதியை மதிப்பிட்டு அதனை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கிலிடவில்லை.

(ஆ) 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளின்போது ரூபா 2.5 மில்லியன் நிலையான வைப்பின் பொருட்டு பெற வேண்டியிருந்த வட்டியானது முறையே ரூபா 65,384, ரூபா 185,000, ரூபா ரூபா 185,000 என்பனவாகும். இது கணக்கிலிடப்படாமையால் வட்டி வருவாயும் பெற வேண்டிய வட்டி வருவாயும் அதேயளவு குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தன.

(இ) வங்கி மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 07 நிலையான வைப்புகளது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,477,450 ஆகும். எவ்வாறாயினும், அதனை ரூபா 7,509,145 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டியமையால் ரூபா 31,695 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட நீதிமன்றத் தண்டப் பண வருவாய் நிலுவையாகிய ரூபா 446,602 ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருவாயாக கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருவாய் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண நிலுவை ரூபா 2,409,642 ஆகும். அதில் 01 முதல் 6 ஆண்டுகளாக நிலுவையாக இருந்தது ரூபா 1,909,642 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஏனைய வருவாய் நிலுவை ரூபா 440,870 ஆகும். அதில் 01 முதல் 08 ஆண்டுகளாக நிலுவையான இருந்தது ரூபா 357,920 ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடை வாடகை நிலுவை ரூபா 161,550 ஆகும். அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொகை ரூபா 21,600 ஆகும். 02 முதல் 03 ஆண்டுகளுக்குட்பட்டவை ரூபா 50,000 ஆகும்.

### 1.3.4 இனங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | |
| பிரிவு 126(x)(ஆ) | | அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள நடமாடும் வியாபாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை | | |
| விதி 5(7) | - | நிதி மற்றும் களஞ்சியங்கள் தொடர்பாகப் போதிய உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை. |
| விதி 65 | - | வருவாய் தொடர்பாகப் பணியாற்றும் எழுதுவினைஞர் கொடுப்பனவுக்கான கால எல்லையின் இறுதியில் கொடுப்பனவுகளைப் புறக்கணித்தோரது பட்டியலைத் தயாரித்து செயலாளரிடம் சமர்ப்பித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| விதி 152 | - | பி.ச 6 க்கமைய மாதாந்தப் பெறுவனவுக் கூற்று ஒன்று பேணப்படவில்லை. |
| விதி 155 | - | பி.ச 10 க்கமைய பிரதான காசேடு பேணப்படவில்லை. |
| விதி 159 | - | பி.ச 15 க்கமைய மாதாந்த ஒருங்கிணைந்த பெறுவனவுப் பகுப்பாய்வு பேணப்படவில்லை. |
| விதி 165 | - | பிரதான பேரேடு நாளதுவரையாக்கப்படவில்லை. |
| விதி 169 | - | பி.ச 40 மற்றும் 43 க்கமைய முறையே மதிப்பீட்டுப் பேரேடு மற்றும் வேலை விபர அளவைப் புத்தகம் என்பன பேணப்படவில்லை. |
| விதி 180 | - | காசு, களஞ்சிய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களாகப் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அல்லது வருமானச் சேகரிப்பு உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்ய வேண்டுமாயினும், அவ்வாறு செய்யவில்லை. |
| விதி 193 | - | பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு நிதியேற்பாடு என்பவற்றை இணக்கம் செய்கையில் ஒவ்வொரு வருவாய் விடயத்தின் கீழும் ஒவ்வொரு செலவினத்திலும் கீழுமான கூற்றுக்களுடன் மிகையோ அல்லது செலவினமோ இல்லாது எஞ்சியுள்ள மீதி தொடர்பாக விளக்கமளிக்கும் கூற்றுக்களும் ஒவ்வொரு ஆண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| விதி 217 | - | பி.ச 46 க்கமைய சபை பயன்படுத்தும் மற்றும் வாடகைக்கு வழங்கும் சகல காணிகளும் கட்டிடங்களும் தொடர்பாகப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்
-------------------------------------------------

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 570 | - | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலங் கடந்த சகல வைப்புக்கள் |

| | | |
|---|---|---|
| | | தொடர்பான நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| நிதிப்பிரமாணங்கள் 571(2) மற்றும் (3) | 508,838 | காலங் கடந்த வைப்புக்களை அரச வருவாயில் செலவு வைத்தோ அல்லது கூடிய விரைவில் திருப்பிச் செலுத்தவோ வேண்டும். எவ்வாறாயினும், காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஈ) திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| (i) முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 செப்டெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க சுற்றறிக்கை | - | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் தனது நிறுவனத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக அறிக்கைகளைப் பேணுவது போதியளவாக உள்ளதா என்பதை பரிசீலிக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாமையால் சபையின் நிலையான மற்றும் கணனி மென் அணிகள் மற்றும் துணைப் பாகங்கள் தொடர்பான பதிவேடு போன்றன பேணப்படாதிருந்தமை தெரிய வந்தது. |
| (ii) முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2012 சனவரி 13 ஆந் திகதிய DMA/2012/101 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை வினைத்திறனுடன் நடாத்துவதற்கு, கணனி மற்றும் தகவல் முறைமையில் (CIS) உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென வழிகாட்டல் மற்றும் கேள்விக் கொத்து ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருந்தபோதும், உள்ளகக் கணக்காய்வாளர் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. |
| (உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 1985 யூன் 03 ஆந் திகதிய 293 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.19 ஆம் பந்தி | 1,533,000 | சேவையில் உறுதி செய்யப்பட்டிராத உத்தியோகத்தர் ஒருவர் கடனைப் பெறுவதற்குச் சமர்ப்பிக்க வேண்டிய விசேட சான்றிதழின்றி சபையானது 2015, 2016 ஆம் ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் 25 உத்தியோகத்தர்களுக்கு இடர்க் கடன்களை வழங்கியிருந்தது. |

(ஊ) வட மாகாண நிதிப் பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 101 | - | மீளாய்வாண்டினது உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளது பிரதிகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,296,770 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் குறைந்த வருவாய் ரூபா 1,691,900 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரித்த வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாயினது தோற்றுவாய் | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரித்த வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரித்த வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| வாடகை | 906,000 | 3,959,000 | 490,300 | 395,900 | 756,000 | 65,550 | 161,650 | 65,550 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,000,000 | 132,209,950 | 132,209,950 | 5,242,042 | 700,000 | 1,093,600 | 1,093,600 | 1,093,600 |
| ஏனைய வருவாய் | 5,738,000 | 5,242,042 | 5,242,042 | 5,242,042 | 12,218,500 | 5,270,499 | 5,270,499 | 5,270,499 |
| | 5,738,000 | 141,410,992 | 137,942,292 | 10,879,984 | 13,674,500 | 6,429,649 | 6,525,749 | 6,429,649 |

#### 2.2.2 வாடகை

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெப்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் கடை வாடகையானது குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவையேனும் விலை மதிப்புத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தஞ் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 07 ஆண்டுகளுக்கு முன்பே மதிப்பிடப்பட்ட வாடகையின்

அடிப்படையில் கூறு விலைகள் கோரப்பட்டு சபையின் 13 கடைகளும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

**2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் 2006 மற்றும் 2016 ஆம் ஆண்டுகள் முதல் நிறுவப்பட்ட தொலைபேசிக் கோபுரங்கள் இரண்டிற்குமான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் ஆண்டொன்றிற்கு ரூபா 3,000 வீதப்படி மீளாய்வாண்டு வரை ரூபா 42,000 ஆகும். இதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பிரதேச சபையின்யின் அதிகாரத்துக்குட்பட்ட மாமடுவ எனுமிடத்தில் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைபேசிக் கோபுரம் 2006 யூன் 20 ஆந் திகதி நிறுவப்பட்டபோதும், அதன் பொருட்டு அறவிட வேண்டிய நிறுவுதல் கட்டணமாகிய ரூபா 210,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படுவதும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற வேண்டியதுமான வியாபார நிலையங்களை இனங்காண்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 ஏனைய வருவாய்**

சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் 204 குழாய் கிணறுகள் முறையான பராமரிப்பில்லாததால் அநேக ஆண்டுகளாக கட்டணம் அறவிடப்படாதிருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

**(அ) நீதிமன்றத் தண்டப்பணம்**

நானாவித கட்டளைச் சட்டங்களின் கீழ் மஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலிருந்து டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,570,358 ஆகும்.

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 2,409,642 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பிரதேச சபையானது தனது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் திண்மக் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், பிரித்தொதுக்குதல், மீள் சுழற்சியில் ஈடுபடுத்தல் போன்ற வேலைத் திட்டங்களைத் தயாரித்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையின் தொலை நோக்குக் கூற்றின் பிரகாரம் சபையானது தனது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் பூரண அபிவிருத்தியையும் நலன்களையும் பொது மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமாயினும், போதிய நிதியத்தைக் கொண்டிருந்த பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் 2012 முதல் 2015 வரை எதுவித அபிவிருத்தி நடவடிக்கைகளும் நடைபெற்றிருக்கவில்லை. 2016 மற்றும் மீளாய்வாண்டுகளின்போது முறையே ரூபா 34,702 மற்றும் ரூபா 391,672 என அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 முதல் வெற்றிடமாக உள்ள 04 சாரதிகளின் பதவிகளும் ஏனைய 07 பதவிகளும் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளவில்லை.

(இ) 2017 மே 30 ஆந் திகதி ரூபா 24,800 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 2 கைவிரல் அடையாள இயந்திரங்கள் 2018 ஏப்ரல் 18 ஆந் திகதி வரை மாமடுவ நூலகத்திலும் ஆயுர்வேத நிலையத்திலும் பெரிய உலுக்குளம் நூலகத்திலும் பொருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஈ) சபையின் வாகனக் குழாமிலிருந்த 35 வாகனங்களில் 34 க்கு மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரங்களும் 14 வாகனங்களுக்கு காப்புறுதிச் சான்றிதழ்களும் பெறப்படாதிருந்தன.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பயன்படுத்தப்படக் கூடிய 10 டிறக்கடர்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ii) 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,237,251 செலவில் 3 வாரச் சந்தைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதும், 2018 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் அவை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்படாதிருந்தன.

(iii) சபையிடம் 30 வாகனங்களும் இயந்திர சாதனங்களும் உள்ளபோதும் அச் சகல வாகனங்களையும் செலுத்துவதற்கு ஒரு சாரதி மாத்திரமே பணியிலமர்த்தப்பட்டிருந்தார்.

**(ஆ) பழுதுபார்த்தலும் பராமரிப்பும் இன்மை**

பிரதேச சபைக்குச் சொந்தமான கலாசார நிலையத்தை போதியளவு பராமரிக்காமையால் கட்டிடங்களும் உபகரணங்களும் அழிவுற்றவாறிருந்தன.

**(இ) வருடாந்த பொருட் கணிப்பு**

2016 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பு அறிக்கையில் 13 பொருட்கள் தொடர்பாக பரிந்துரைக்கப்பட்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**3.5 பொருட் கொள்வனவு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.7.7 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச பொருட் கொள்வனவுக் குழுவில் பிறிதொரு நிறுவனத்தின் பொருள் கொள்வனவு நடைமுறைகள் தொடர்பான அறிவுடைய ஒரு உத்தியோகத்தர் இருக்க வேண்டுமாயினும், அதற்கு முரணாக குழுவின் சகல உத்தியோகத்தர்களும் பிரதேச சபையாலேயே நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.01 பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 க்கு மேற்பட்ட பொருட்களும் சேவைகளும் பெறப்படும்போது தொழில்நுட்பக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமாயினும், 03 சந்தர்ப்பங்களில் ரூபா 2,509,600 பெறுமதியான பொருட் கொள்வனவின்போது தொழில்நுட்பக் குழு நியமிக்கப்படவில்லை.

(இ) கூறு விலைக் கோரல் கடிதத்தில் தேவைப்படும் பொருட்களினது அளவு குறிப்பிடப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக 16 சந்தர்ப்பங்களில் ரூபா 5,749,380 பெறுமதியுடைய பொருட்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படுகையில் ஒரு பொருளுக்கு மாத்திரம் கூறு விலை கோரப்பட்டமையால் பெறக்கூடியதாகவிருந்த தரகை சபை இழந்திருந்தது.

(ஈ) பதினாறு சந்தர்ப்பங்களில் ரூபா 5,749,380 பெறுமதியுடைய பொருட் கொள்வனவுகளின் போது பொருட் கொள்வனவு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட விதம் மற்றும் கூறு விலை ஆவணங்கள் வழங்குனருக்கு அனுப்பப்பட்ட விதம் என்பவற்றிற்கான எழுத்து மூலச் சான்று, கூறு விலைகள் பெறப்பட்ட விதம், அவை திறக்கப்பட்ட விதம் என்பவற்றிற்கு முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்ததற்கான சான்று எதுவும் இருக்கவில்லை.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

**மடுகந்த கலாசார நிலைய வீதிக்குத் தாரிடல்**

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் ரூபா 1,469,902 செலவில் நிர்மாணித்த மடுகந்த கலாசார நிலைய வீதி 2018 ஏப்ரல் 17 ஆந் திகதி நேரடியாகப் பரிசோதிக்கப்பட்டபோது மதிப்பீட்டின் பிரகாரம் பாதத்தின் ஒரு பக்க அகலம் 0.75 மீட்டர் ஆக இருக்க வேண்டியபோதும் 0.35 மீட்டருக்கு 0.6 மீட்டருக்கும் இடையேயான அளவில் பாதம் இடப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2015 ஆம் ஆண்டிற்கான 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2016 ஆம் ஆண்டிற்கான 3 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2018 மே 30 ஆந் திகதியளவிலும் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | கணக்கு ஏடுகளும் பதிவேடுகளும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை. |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | | பயன்படுத்தப்படாதிருத்தல் |
| (இ) வருவாய் நிர்வாகம் | | வருவாய் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) வாகனக் கட்டுப்பாடு | | சாரதிகள் இல்லாதிருத்தல். |
| (உ) உள்ளகக் கட்டுப்பாடு | (i) | நிரந்தமான இயந்திர செலுத்துநர்கள் இல்லாதிருத்தல். |
| | (ii) | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை |